பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை - 6 அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: மருத்துவர். டி. எஸ். செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

நாள் : 19.10.2021

ந.க.எண்.32276/ப.தொ.4/2019/இரு3

பொருள்: பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.பெ.ரெங்கசாமி தபெ (அமரர்) திரு.அ.பெரியசாமி- கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம்- பணிவரன்முறை செய்தல் -ஆணை பிறப்பித்தல்-தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.32276/ப.தொ.4/2019/இரு3. நாள்:21.11.2019
2. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.6687/அ1/2019,நாள்:04.03.2021.
3. அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை,நாள்:26.02.2021

*******

ஆணை:

இத்துறையில் திருச்சிராப்பள்ளி சுகாதாரப் பகுதி மாவட்டம், வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்த திரு.அ.பெரியசாமி என்பவர் 07.02.2007 தேதியில் காலமாகியுள்ளார். அவருடைய மகன் திரு.பெ.ரெங்கசாமி என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு புதுக்கோட்டை சுகாதாரப் பகுதி மாவட்டம், பாலாண்டம்பட்டி ( வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், கொடும்பாலூர்) ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இணைந்துள்ளார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 02.12.2019 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்நேர்வில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021, பத்தி எண்.(5.1) இல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.பெ.ரெங்கசாமி தபெ (அமரர்) திரு.அ.பெரியசாமி என்பவர் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இத்துறையில் 02.12.2019 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். எனவே, இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை, அரசாணை

.....2

BLOCK MEDICAL OFFICER
GOVT PRIMARY HEALTH CENTRE
KODUMBALUR,
PUDUKKOTTAI Dt - 621 316

(நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (கூ1) துறை, நாள்:26.02.2021 இல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் இந்நேர்வில் எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத காரணத்தினால் திரு.பெ.ரெங்கசாமி த/பெ (அமரர்) திரு.அ.பெரியசாமி என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 02.12.2019 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தி.சி.செல்வவிநாயகம்,
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும்
நோய்தடுப்பு மருந்துத்துறை,
சென்னை 6.

பெறுநர்:
திரு.பெ.ரெங்கசாமி, இளநிலை உதவியாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், பாலாண்டம்பட்டி, புதுக்கோட்டை சுகாதாரப் பகுதி மாவட்டம்.(துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் புதுக்கோட்டை மூலமாக)

நகல்
**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், புதுக்கோட்டை- பதிவஞ்சல் ஒப்புகையுடன்-** ( தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் கீழ்கண்ட சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

1. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று (அசல்)( எண்.0343420)
2. மாற்றுச் சான்று(அசல்)(எண்.1366)

**துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி- பதிவஞ்சல் ஒப்புகையுடன்-** ( மறைந்த அரசு ஊழியர் திரு.அ.பெரியசாமி என்பவரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

நகல்
வட்டார மருத்துவ அலுவலர், வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், கொடும்பாளூர், புதுக்கோட்டை சுகாதாரப் பகுதி மாவட்டம்.
இவ்வலுவலக ப.தொ.4 பிரிவின் இருக்கை 4.
இருப்புக்கோப்பு-உபரி-2

//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண் · 6687/அ1/19 நாள்: · 11-2021

அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்.

பெறுநர்: திரு.பெ.ரெங்கசாமி, இ.நி.உதவியாளர், அ.ஆ.சு.நிலையம், பாலாண்டம்பட்டி

நகல்: வட்டார மருத்துவ அலுவலர், வ.ஆ.சு.நிலையம், கொடும்பாளூர்

DEPUTY DIRECTOR OF
HEALTH SERVICES,
PUDUKKOTTAI - 622 001